**தலைப்பு 227–ஆட்களை பதிவு செய்யும் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு **227**–ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்களை பதிவு செய்யும்திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023யூன் 01ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 ஆகஸ்ட் 23 ஆந்திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது.இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தைத் தவிர, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆட்களை பதிவு செய்யும்திணைக்களத்தின்நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும்பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதைபிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும்சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களது கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது அது தொடர்பாக கருத்திற் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பிரபலமாவதால் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளது உறுதியான தன்மை,கணக்கீடுமதிப்பீடுகளது நியாயபூர்வத் தன்மை மற்றும் முகாமைத்துவம் மேற்கொண்ட தொடர்புடைய வெளிப்படுத்தல் என்பன மதிப்பாய்வு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களது கட்டமைப்பும் உள்ளடக்கமும் தொடர்பாக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கலும் சம்பவங்களும் நியாயமாக உள்ளடங்கி உள்ளதுடன் வெளிப்படுத்தலை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்கள் ஒட்டு மொத்தமாகச் சமர்ப்பிக்கப்பட்டும் உள்ளன.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டபூர்வ தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன என்பதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பான என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

**(அ) மீண்டெழும் செலவினங்கள்**

நிதிக்கூற்றுக்களுக்குரிய மீண்டெழும் செலவினங்களை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 66,090 ஆன உபசரணை செலவுகள் செலவு விடய இலக்கம் 227-01-01-1203உணவு மற்றும் சீருடைகள் இன் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில், திணைக்களத்தின் பயிற்சித் தேவைகளின் அடிப்படையில் அந்த ஆண்டு தொடர்பான பயிற்சித் திட்டம் தயாரிக்கப்பட்டதுடன் அதற்காக மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகை ரூபா 1,500,000 ஆக இருந்ததுடன் ஆனால் அந்த ஆண்டு பதவியணி பயிற்சிக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூபா 1,000,000 மட்டுமே என்பதால் வருடத்தில் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட வேண்டிய தேவையான பயிற்சித் திட்டங்களின் தேவைக்கு ஏற்ப உரிய காலத்தில் ஒழுங்கமைக்கப்பட்டதாகவும். அந்தச் செலவுகளை உரிய விதிகளின் வரம்பிற்குள் நிர்வகிப்பதற்கு, சில பயிற்சித் திட்டங்களுக்கான உபசரணை செலவுகள் (உணவுச் செலவுகள்) உணவு மற்றும் சீருடைகள என்ற செலவு விடயத்தின் கீழ் கணக்கிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. | செலவினங்கள் சரியாக செலவு விடயத்தின் கீழ் கணக்கிடப்படுவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

**(ஆ) ஆதனம் பொறி மற்றும் உபகரணம்**

ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களை கணக்கு வைக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2021 திசெம்பர் 31 இல் அலுவலக உபகரணங்கள் மற்றும் கணினி உபகரணங்களின் பெறுமதிமுறையே ரூபா 3,253,224 மற்றும் ரூபா 98,204,083 ஆக இருந்தபோதிலும் 2022 சனவரி 01இல் நிதியல்லாச் சொத்துகள் அறிக்கையில் (ACA 6) அவை முறையே ரூபா 3,442,724 மற்றும் ரூபா98,014,583 ஆக காட்டப்பட்டிருந்தன. | அமைப்பின் பிழை காரணமாக ஏற்பட்ட தவறு இந்த ஆரம்ப மீதிகளின் வேறுபாட்டிற்கு தாக்கமளித்திருந்ததாக தெரிவிக்கப்பட்டது. | மீதிகளின் முரண்பாடுகளுக்கான காரணங்கள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ii) | திணைக்களத்தினால் கிளை அலுவலகங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 2,736,660 மதிப்புள்ள 131 UPS, 5 Networking switch with Rack Mount kit,5 Printersமற்றும் 38 QR Reader's நிதியல்லாச் சொத்துகளின் அறிக்கையில் (ACA 6) கைத்தவிர்ப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | இந்த திணைக்களத்தினால் பிரதேச செயலகத்திற்கு விடுவிப்புக் கட்டளை மூலம் சொத்துக்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் பின்னர் உரிய சொத்துக்கள் பிரதேச செயலகத்தின் பொருட்பதிவேட்டில் உள்ளடக்கப்படும்.2020/01/22 ஆம் திகதிய DRP/ST/01/07ஆம் இலக்ககடிதத்தின் பிரகாரம் சொத்துக்களின் பதிவேடுகளை எவ்வாறு பேணுவது என்பது குறித்து பிரதேச செயலாளருக்கு விளக்கமளிக்கப்பட்டுள்ளது. எனவே, இனி அந்த சொத்துக்களை திணைக்களத்தின் இருப்புப் பதிவேடுகளில் பராமரிக்க வேண்டிய அவசியமில்லை என்றும், அப்போது இருந்த அமைப்பில் காணப்பட்ட வசதிகளின்படி அந்த சொத்துக்கள் கைத்தவிர்ப்புச் செய்யப்பட்டவையாக அகற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. | உண்மையில் கைத்தவிர்ப்புச் செய்யப்பட்ட சொத்துகளின் பெறுமதியை மட்டுமே கைத்தவிர்ப்புகளின் கீழ் காட்டுவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 ஆம் ஆண்டில் 03 செலவு விடயங்களுக்காக நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றல்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ள போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை அவ்வாறு மாற்றப்பட்ட ஒதுக்கீடுகளில் 19 சதவீதம் முதல் 79 சதவீதம் வரையான சேமிப்புகள் காணப்பட்டன. | 1201 செலவு விடயத்தில் நி.பி 66 இன் கீழ் மாற்றப்பட்ட ரூபா 3,488,317 ஆன தொகையொன்று சேமிப்பாக இருந்தாலும்,அத்தொகையின் ரூபா 2,714,000 ஆன தொகைக்கு 2022 ஆம் ஆண்டில் கடப்பாடுகளுக்கு உடன்பட்டிருந்தமை மற்றும் 1303 செலவு விடயத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டபோது ரூபா 913,478 மதிப்பிடப்பட்டபோதிலும் இந்த ஆண்டு பெறப்பட்ட ஒதுக்கீட்டு தொகை ரூபா 200,000 மட்டுமாக இருந்தமை மற்றும் 1403 செலவு விடயத்திற்காக , அரசின் தீர்மானத்திற்கு மின்சார மற்றும் நீர்க்கட்டணம் அதிகரித்ததால் செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டபோது காணப்பட்ட கட்டணத்துடன் ஒப்பிடப்பட்டு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் , பின்னர் ஏற்பட்ட மின்வெட்டு காரணமாக நிதியேற்பாடு சேமிக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. | முறையான கவனத்துடன்ஒதுக் கீடுகளை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகள் ஏற்படுத்தப்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 ஆம் ஆண்டின் போது அட்டைகளின் கொள்வனவுக்காக தனியார் நிறுவனமொன்றிற்கு செலுத்த வேண்டிய ரூபா 56,492,100 ஆனது 2022 திசெம்பர் 31 இல்கடப்பாடுகள் மற்றும் | தனியார் நிறுவனமொன்றின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட முனனர் அச்சிடப்பட்ட ஒரு மில்லியன் பாலிகார்பனேட் அட்டைகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டபோது முன்னாள் பாதுகாப்புச் செயலாளரின் | உரிய காலப்பகுதிக்கான பொறுப்புகள்மற்று ம் கடப்பாடுகள்தீர்ப்ப னவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறுப்புகள் பற்றிய கூற்றில் காட்டப்பட்டிருந்த போதிலும் 2023 பெப்ரவரி 28 ஆம் திகதி வரையிலும் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறிவுறுத்தலின்படி கொடுப்பனவு நிறுததப்பட்டமைளால் 2020 ஆம் ஆண்டில்,ரூபா 56,492,100 இற்கான பொறுப்பொன்று ஏற்பட்டது. அதன் பிரகாரம் இதுவரை மேற்படி பொறுப்பிற்கான தொகையை செலுத்துவதற்கு அங்கீகாரம் பெறப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | மீளாய்வாண்டில் ஒரு மூலதனச் செலவுவிடயத்திற்கான ஒதுக்கீட்டிற்கான சேமிப்பு ரூபா 20,411,831 ஆக இருந்த போதிலும் மொத்தப் பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 58,725,713 ஆக இருந்தமையால் ஒதுக்கீட்டை விஞ்சியதாக பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 38,313,882 ஆக இருந்தது. | அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் 2019 இல் கொள்வனவு செய்யப்பட்ட ஒரு மில்லியன் பாலிகார்பனேட் அட்டைகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டபோது முன்னாள் பாதுகாப்புச் செயலாளரின் அறிவுறுத்தலின்படி கொடுப்பனவு நிறுத்தப்பட்டது.அதனால் மொத்தத்தொகையில் ரூபா 56,492,100 ஆன தொகையொன்று செலுத்தப்படவில்லை. 2020 ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை பணம் செலுத்துவதற்கான அங்கீகாரம்பெறப்படாததால் தற்போது திணைக்களத்திற்கு சொந்தமான மக்கள் பாதுகாப்பு அமைச்சிலிருந்தும் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டிருந்ததுடன் இந்த அங்கீகாரம் 2023 ஆம் ஆண்டில் பெறப்பட உள்ளதால், 2022 ஆம் ஆண்டின் மீதமுள்ள ஒதுக்கீடு திறமையாக பயன்படுத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. | ஒதுக்கீட்டை விஞ்சியதாக பொறுப்புக்களை ஏற்படுத்தாது இருப்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ளது.

**அவதானிப்புகள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி<br>ரூபா | இணங்காமை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நி.பி. 571(1) | 1,195,600 | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் அரையாண்டு காலாவதியாகிய வைப்புப் பட்டியல் தயாரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் காலாவதியாகிய வைப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் காலாவதியாகிய வைப்புக்கள் தொடர்பான பதிவேடொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| | நி.பி. 565(5) | - | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொது 71 படிவத்தில் பொது வைப்புக்கள் பொழிப்பு தயாரிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டு முதல் பொது வைப்புக்கள் பொழிப்பொன்று பொது 71 படிவத்தின் பிரகாரம் சமர்ப்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொது வைப்புக்கள் பொழிப்பு சமர்ப்பிக்கப்படு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 2019 ஒக்தோபர் 23 ஆம் திகதிய **DRP/IT/04/25** ஆம் இலக்க திணைக்கள உள்ளகச் சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக கிராம அலுவலரால் சான்றளிக்கப்பட்ட மற்றும் பிரதேச செயலக நிறைவேற்று உத்தியோகத்தரின் அங்கீகாரம் அளிக்கப்பட்ட அடையாள அட்டை விண்ணப்பங்கள் கணினி அமைப்பில் உள்ளடக்கப்படாமல் ஒரு மாதத்திற்கும் | நாட்டில் அன்றைய நிலவரப்படி, கோவிட்-19 பரவலைக் கட்டுப்படுத்துதல், எரிபொருள் நெருக்கடி, அதிகாரிகள் வாரத்தில் 03 நாட்கள் பணிக்கு அழைக்கப்பட்டமை, அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவை தடவை முறைமையில் பணிக்கு அழைக்கப்பட்டமை, பகலில் 4 முதல் 5 | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேற்பட்ட காலமாக அடையாள அட்டைப் பிரிவில் வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. | மணி நேரம் வரை மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டமை போன்ற காரணங்களுக்காக கிராம அதிகாரிகளிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் அச்சந்தர்ப்பத்திலேயே கணினி அமைப்பிற்கு உள்ளீடு செய்யப்படுதில் நடைமுறைச் சிக்கல் இருப்பதாக பிரதேச செயலாளர்களினால் தெரிவிக்கப் பட்டிருந்தது. | |
| (iii) | 2016 பெப்ரவரி 23 ஆம் திகதிய **DRP/OP/01/New. App./43**ஆம் இலக்க திணைக்கள உள்ளகச் சுற்றறிக்கையின் 11 ஆம் பந்தி | சுற்றறிக்கையின்படி சான்றுப்படுத்தும் அதிகாரிக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் 07 நாட்களுக்குள் அடையாள அட்டைப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும் அடையாள அட்டைப் பிரிவிற்கு விண்ணப்பத்தைப் பெறுவதற்கு 10 நாட்கள் முதல் 35 நாட்கள் வரையான காலமொன்று எடுக்கப்பட்ட சந்தர்ப்பம் அத்துடன் கிராம உத்தியோகத்தரினால் பிரதேச செயலகத்திற்கு பணத்தை ஒப்படைப்பதற்கு13 முதல் 51 நாட்கள் வரையானகால தாமதமொன்று ஏற்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. | கிராம உத்தியோகத்தரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் அதற்காக வசூலிக்கப்பட்ட பணத்தை ஒரு வாரத்திற்கும் குறைவான காலத்திற்குள் பிரதேச செயலகத்திற்கு வழங்குமாறு ,பிரதேச செயலகங்களில் பணிபுரியும் அபிவிருத்தி அலுவலர்கள் மூலம் கிராம உத்தியோகத்தருக் கும் , 2022.09.07ஆம் திகதிய கடிதம் மூலம் அவ்வப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளைப் பின்பற்றி செயற்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் திணைக்களத்தின் பிரதான செயலாற்றல் குறிகாட்டிகள்(KPIs) மூன்றிற்கு இடையே பிரதான குறிகாட்டியான "ஆண்டின் பொதுவான சேவையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து விநியோகிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகளின் எண்ணிக்கை" 68 சதவீதமாக காணப்பட்டது. | முன் அச்சிடப்பட்ட அட்டைகள் தட்டுப்பாடு காரணமாக, முதல் முறையாக தேசிய அடையாள அட்டை தயாரிக்கப்படுகின்ற 2005.01.31இற்குப் பின்னர் பிறந்த பாடசாலை விண்ணப்பதாரர்களுக்கு தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக தகவல் உறுதிப்படுத்தல் கடிதங்கள் தற்காலிகமாக வழங்கப்படுவதால், அந்த விண்ணப்பங்களுக்கு அடையாள அட்டைக்குப் அச்சிடப்படவில்லை என்பதால் அவ் விண்ணப்பங்கள் Print Waitingகட்டத்தில்காணப்பட்டமையால் 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அடையாள அட்டைகளின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. | செயலாற்றல் குறிகாட்டிகளை அடைந்து கொள்வதில் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.2 சொத்து முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 பொருட் கணக்கெடுப்பில் பரிந்துரைக்கப்படாத ரூபா 881,500 மதிப்புள்ள 10 கணினிகள் மீளாய்வாண்டின் நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையில் (ACA 6) கைத்தவிர்ப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன. | 2018 ஆம் ஆண்டின் க பொருட் கணக்கெடுப்பின் மூலம் சொத்துக்கள் கைத்தவிர்ப்பு செய்யப்பட்டு ஆனால் குறித்த வருடத்தில் CIGAS கணினி நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் அச்சொத்துக்கள் அகற்றப்படாததால் அத் திருத்தம் 2022 ஆம் ஆண்டில் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது, | மீளாய்வாண்டில் செய்யப்பட்ட கைத்தவிர்ப்புக்கள் மட்டுமே நிதியல்லாத சொத்துக்கள் அறிக்கையில் (ACA 6) கைத்தவிர்ப்புக்களின் கீழ் காட்டப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டத்தால் ஆட் பதிவு திணைக்களத்திற்கு 2012 முதல் இன்றுவரை வழங்கப்பட்ட சொத்துகளின் ஒரு பகுதி CIGAS திட்டத்தில் சேர்க்கப்படாததுடன், மேலும் செயற்திட்டத்தால் வழங்கப்பட்ட சொத்துக்களை வேறுபடுத்துவதற்கான முறையான முறைமையொன்று திணைக்களத்தினால் பின்பற்றப்படவில்லை என்பதுடன் இத்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட சொத்துக்களை பிரதேச செயலகங்களில் நிறுவப்பட்டுள்ள கிளை அலுவலகங்களுக்கும் திணைக்களம் பகிர்ந்தளித்துள்ள போதிலும், அந்த சொத்துக்களின் விபரங்கள் அடங்கிய முறையான ஆவணங்களும் பராமரிக்கப்படவில்லை. | e-nicசெயற்திட்டம் அல்லது வேறு திணைக்களமொன்று அல்லது அமைச்சொன்றின் மூலம் அல்லது சொத்துக்கள் பெறப்பட்ட பிறகு, அந்த சொத்துக்கள் திணைக்களத்தின் சொத்துகளாக இருப்பின் அவை CIGAS கணினி அமைப்பில் காணப்படும் வசதிகளின் கீழ் உள்ளிடப்படுகின்றன.CIGAS அமைப்பில் சொத்துத் தகவல்களை உள்ளிடுவதற்காக 2015 ஆம் ஆண்டு முதல் வசதிகள் வழங்கப்பட்டுள்ளதுடன் அதன்பின்னர்செய்யப்பட்ட கொள்வனவுகள் மற்றும் பெறுவனவகள் ரசீதுகள் CIGAS இன் சொத்துப் பதிவேட்டில் உள்ளிடப்பட்டுள்ளன.CIGAS அமைப்பில் e-nicசெயற்திட்டத்தால் பெறப்பட்ட சொத்துகளை அடையாளம் காண்பதற்கு முறையொன்று இல்லை என்றும்,களஞ்சியப்பிரிவில் உள்ள பொருட்பதிவேட்டில் அந்த சொத்துக்கள் குறித்த தகவல்கள் அடங்கிய முறையான ஆவணங்கள் களஞ்சியப்பிரிவில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது். | சொத்துக்களை இனங்காணக்கூடிய விதத்தில் ஆவணப்படுத்துவதில் கவயட் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | செயற்திட்டப் பிரிவினால் கணக்காய்விற்கு வழங்கப்பட்ட தகவலின்படி,இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைத் திட்டத்தின் கீழ், திட்டம் தொடங்கியதில் இருந்து தற்போது வரை, ஆட் பதிவுத் திணைக்களத்தின் மூலம் பிரதேச செயலகங்களுக்கு ரூபா 114,964,961 மதிப்பிலான பொருட்கள்/சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும் ஆட்பதிவுத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட தகவலின்படி, வழங்கப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூபா 111,616,046 ஆக இருந்ததால் ரூபா 3,348,915 ஆன பொருட்கள் பற்றாக்குறையொன்று காணப்பட்டது. | இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைத் திட்டம் தொடங்கியதில் இருந்து தற்போது வரை,ரூபா 114,964,961 மதிப்பிலான பொருட்கள்/சொத்துக்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் அந்த பொருட்கள்/சொத்துக்கள் பிரதேச செயலகங்கள் மற்றும் திணைக்களத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.அதன்படி ரூபா 111,616,046 பெறுமதியான பொருட்கள்/சொத்துக்கள் பிரதேச செயலக அலுவலகங்களில் ,ரூபா 3,348,915 பெறுமதியான பொருட்கள்/சொத்துக்கள் திணைக்களத்திலும் பயன்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட ஒதுக்கீடுகள் மூலம் வழங்கப்படும் சொத்துக்கள் தனித்தனியாக அடையாளம் காணக்கூடியதாகவும் ஆவணப்படுத்தப்பட்ட தாகவும் இருக்க வேண்டும். |

### 3.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய். 2292/13ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் 2022 ஆகஸ்ட் 15 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் அஞ்சல் கட்டணங்களின் திருத்தத்திற்கு ஏற்ப, தேசிய அடையாள அட்டைகளை பதிவு செய்யப்பட்ட தபாலில் அனுப்புவதற்கான கட்டணம் ரூபா 45 இல் இருந்து ரூபா 110 ஆக அதிகரிக்கப்பட்டு 2022 ஆகஸ்ட் 18 ஆம் திகதிய். DRP/OP/01/DS/03ஆம் இலக்க உள்ளகச் சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. சுற்றறிக்கை வெளியிடப்பட்ட சந்தர்ப்பம் வரை பயன்படுத்தப்படாத ரூபா 4,298,895 மதிப்புள்ள முத்திரை ஒட்டப்பட்ட 95,531 கடித உறைகள்2022 செப்டம்பர் முதல் திசெம்பர் வரை பதிவாளரினால் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் தாமதமின்றி குறிப்பிட்ட காலத்திற்குள் கிடைத்திருந்தால், அந்த முத்திரையிடப்பட்ட உறைகளைப் பயன்படுத்தியிருக்கலாம். | 2022 ஆகஸ்ட் 09 ஆம் திகதிய். 2292/13ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி மூலம் திருத்தப்பட்ட புதிய அஞ்சல் கட்டணம் தொடர்பாக தேசிய அடையாள அட்டையை அஞ்சல் செய்வது தொடர்பாக நிவாரணமொன்று கோரி DRP/OP/01/GEN/24 ஆம் இலக்கமற்றும் 2022.05.30 ஆம் திகதிய கடிதம் மூலம் தபாலதிபருக்கு கோரிக்கையொன்று விடுக்கப்பட்டதுடன், அதற்காக தபாலதிபரின் DOP/HQ(OP)LSN02/Price – Riv/20/2022ஆம் இலக்கமற்றும் 2022.08.23 ஆம் திகதிய கடிதம் மூலம் 2022.10.31 வரை நிவாரண காலமொன்று வழங்கப்பட்டது. அதன் பிரகரம் பழைய ரூபா 45 முத்திரையிடப்பட்ட உறைகள் அதிகபட்ச அளவில் பயன்படுத்தப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது.<br><br>மேலும், தேசிய அடையாள அட்டைகளை அச்சிடுவதற்காக முன்னர் அச்சிடப்பட்ட அட்டைகளை வாங்குவது தொடர்பான பல பெறுகைகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணிகளால் இரத்து செய்யப்பட்டமையால் தேசிய அடையாள அட்டைகளை அச்சிடுவதற்காக முன் அச்சிடப்பட்ட அட்டைகளை போதுமான அளவு இருப்பு வைத்திருப்பதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்தினால் | முத்திரையிடப்பட்ட உறைகள்காலதாமதமின்றி தலைமை அலுவலகத்திற்கு கொண்டு வரப்பட்டு அவற்றை திறமையாக பயன்படுததவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | பெறப்படும் விண்ணப்பங்களுக்கு அடையாள அட்டை வழங்குதல் மட்டப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்பட்டமையால் திணைக்களத்திற்கு பெறப்பட்ட அனைத்து முத்திரையிடப்பட்ட அனைத்து கடித உறைகளையும் பயன்படுத்த முடியாதிருந்தது என தெரிவிக்கப்பட்டுள்ளது. | |

## 3.4 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டில் அச்சிடப்பட்ட மொத்த அடையாள அட்டைகளின் எண்ணிக்கை 628,973 ஆக இருந்ததுடன் , அதில் 22,497 அல்லது 4 சதவீதம் குறைபாடுடையவையாக இருந்தன. . இந்த குறைபாடுள்ள அடையாள அட்டைகள் PVC மற்றும் Polycarbonate போன்றஇரண்டு வகையான அட்டைகள் அடங்கியிருந்த போதிலும் குறைபாடுகள் உள்ள அடையாள அட்டைகளின் மொத்த எண்ணிக்கை,மேற்படிஇரண்டு வகையான அட்டைகளுக்கும் தனித்தனியாகச் சமர்ப்பிப்பதற்கு திணைக்களம் தவறியிருந்தமையால் குறைபாடுள்ள அடையாள அட்டைகள் தொடர்பான செலவுக் கணக்கீட்டிற்குத் தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | அச்சிடும் செயல்பாட்டின் போது,பல்வேறு காரணங்களால் இரத்து செய்யப்பட்ட அட்டைகள் (DU/SPOIL)தொடர்பான அறிக்கைகளைப் பெறுதல் InforID அமைப்பு மூலம் மற்றும் அசசீட்டுப் பிரிவில் உள்ள பௌதீக அட்டைகளின் அளவுகளின் அடிப்படையிலும் செய்யப்படுவதுடன்PC அட்டை PVC அட்டை அளவுகள் 2022.06.30 வரை தனித்தனியாக கணக்கிடப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டதுடன் எதிர்காலத்தில் DU/SPOIL அட்டைகளுக்கான பௌதீக அறிக்கை தயாரிக்கும்போது PC அட்டை மற்றும் PVC அட்டை அளவுகளுக்கான தனித்தனியான புள்ளி விவரங்கள் பராமரிக்கப்பட வேண்டுமென அச்சுப்பிரிவிற்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | குறைபாடுள்ள அடையாள அட்டைகள் வகையின் பிரகாரம் தனித்தனியாக கண்டறியப்பட்டு ஆவணப்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்களத்திற்குச் சொந்தமான 335 கிளை அலுவலகங்களுக்கான தனித்தனியாக அடையாளம் காணப்பட்ட மின்சாரக் கட்டணச் செலவு ரூபா 5,961,205 திணைக்களச் செலவு விடய இலக்கம் 227-01-01-1403 இன் கீழ் கொடுப்பனவு செய்யப்படாது இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்ட நிதியேற்பாடுகளின் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தின் பிராந்திய அடையாள அட்டை அலகுகளை நவீனமயமாக்குவதற்கும் நிறுவுவதற்கும் தேவையான உட்கட்டமைப்பை மேம்படுத்தும் பொறுப்பு இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை செயற்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன்,அந்த அலுவலகங்களில் தேவையான வசதிகளை செய்து கொடுத்த பின்னர் திணைக்களத்திற்கு ஒப்படைக்கும் வரை, மின் கட்டணம் உள்ளிட்ட அனைத்து பராமரிப்பு செலவுகளையும்,செயற்திட்ட அலுவலகமே ஏற்க வேண்டியிருந்ததுடன் 2022.12.31 இற்கு பினனர் அந்த அலுவலகங்களின் மின் கட்டணம் உட்பட, அனைத்து தினசரி பராமரிப்பு செலவுகள் இச்செயற்திட்டத்தின் மூலம் செலுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. | திணைக்களத்தின் செலவு விடயத்தின் கீழ் நிதியேற்பாடு அங்கீகரிக்கப்படு வதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2022 திசெம்பர் 31 அன்று வேலை நீக்கம் செய்யப்பட்ட அதிகாரி ஒருவரிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 45,413 மீளாய்வாண்டின் இறுதி வரை அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வேலை நீக்கம் செய்யப்பட்ட அதிகாரியின் மனைவியால் ரூபா 35,000 ஆன தொகையொன்று 2023.01.09 அன்று செலுத்தப்பட்டதாகவும்,அவரால் மேலும் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை செலுத்துமாறு அவரது வெளிநாட்டு முகவரிக்கு எழுத்துப்பூர்வமான அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. | கடன் மீதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தின் 2022 ஆம் ஆண்டிற்கான கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள 05 அதிகாரிகளின் பெயர்கள் 2022 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் | இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் பெயர்ப்பட்டியலில் 05 உத்தியோகத்தர்களின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. | இடமாற்றம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியல் நாளதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். |

இடமாற்றப்பட்ட அதிகாரிகளின் பெயர்ப்பட்டியலில் சேர்க்கப்படவில்லை.

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1,475 ஆக காணப்பட்டதுடன் உள்ளபடியான பதவியணி 1,337 ஆனமையால் 138 வெற்றிடங்கள் காணப்பட்டன. | இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 2022 திசெம்பர் 31 இல் இத் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, உள்ளபடியான பதவியணிமற்றும் வெற்றிடங்கள் தொடர்பான தகவல்கள் சரியானவை என குறிப்பிடப்பட்டுள்ளது. | தற்போதுள்ள வெற்றிடங்களை நிரபபுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சட்ட உத்தியோகத்தர் மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்-தமிழ்), தொழில்நுட்ப உத்தியோகத்தர் உட்பட 06 பதவிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவிகள்எண்ணிக்கையில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | சட்ட உத்தியோகத்தர் மற்றும் கடித உதவியாளர் (திணைக்கள) பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அங்கீகாரத்தைப் பெறுவதற்காக ‘‘பொது சேவையில் ஆட்சேர்ப்பு செயல்முறையை மறுபரிசீலனை செய்வதற்கு அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட அதிகாரிகள் குழு’’விற்கு கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன் மொழிபெயர்ப்பாளர் (சிங்களம்-தமிழ்)வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும்<br><br>தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) மற்றும் தொழில்நுட்ப அதிகாரி (மின்சாரம் மற்றும் இலத்திரனியல்) பதவிகளுக்கு, தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களத்தின் | தற்போதுள்ள வெற்றிடங்களை நிரபபுவதற்கு போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

பணிப்பாளர் நாயகத்தின் கடிதம் மூலம் கோவிட்-19 தொற்றுநோய் நிலைமையைக் கருத்தில் கொண்டு மேலதிக நிதியேற்பாடுகளை வழங்குவதற்கான வரம்புகள் விதிக்கப்பட்டதன் காரணமாக மேற்கண்ட பதவிகளுகபு ஆட்சேர்ப்பு தேவைப்பாடு பின்னர் பரிசீலிக்கப்படுதல் பொருத்தமானதென உத்தேசிக்கப்பட்டள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்ததுடன் வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கை 03/2021 இன் பிரகாரம்புதிய ஆட்சேர்ப்புக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ள மையால் , இருமொழி எழுதுநர் இந்தப் பதவிக்காக புதிதாக ஆட்சேர்ப்பு எதுவும் செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.